# திருவள்ளுவர் சுட்டிய தனிமனித உணர்வுகள்.

முனைவர் ப.பத்மாவதி

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி, அண்ணாநகர்,சென்னை.

pranavpadma80@gmail.com

6

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியம் மனித வாழ்வை பிரதிபலிக்கும் கண்ணாடி எனலாம். படைப்பவன் தன் அனுபவங்களின் சாரத்தைப் படைப்பின் வழியாக இலக்கியத்தின் வழி வெளிப்படுத்துகிறான். அப்படைப்புகள் மனித மனத்தின் எண்ண ஓட்டங்கள், உணர்வுகள் பல நிலைகளில் வெளிப்படுத்தும் மனித நடத்தை மாறுபாடுகள் போன்றவற்றை விளக்குகின்றன.திருவள்ளுவரும் தம் திருக்குறளில் மனித மன உணர்வுகளைச் சுட்டுகிறார். தனிமனித வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய உணர்வுகளால் மனித வாழ்வின் எழுச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் திருக்குறள் கருத்துகள் எங்ஙனம் துணை செய்கின்றன் என்பது இனம் காணப் பெற்றது.

**ஆய்வு நோக்கம்**

திருக்குறள் மானுட சமுதாயம் பேறு பெறக்கூடிய கருத்துகளை எடுத்துக்கூறும் பேரிலக்கியம். குறிப்பாகத் தனி மனிதன் முன்னேற்றம் பெறக்கூடிய வழிமுறைகளை எடுத்தியம்புகிறது. தனிமனிதன் தன் ஆளுமைத்திறனை வளர்த்துக்கொள்ளும் வழிமுறைகளை வள்ளுவர் கூறுகிறார். தனி மனிதன் நடத்தை, எண்ணங்கள் ஆகியவற்றுடன் நல்ல ஆளுமையை வளர்க்கக்கூடிய பண்புகளையும் வள்ளுவர் வரிசைப்படுத்தியுள்ளார். திருக்குறளைப் படிப்போரும், கேட்போரும் சமூக ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவும், சமூகத்தைச் செம்மைப்படுத்தவும் தனிமனித வளர்ச்சியினை ஒழுங்குபடுத்தவும் வேண்டிய ஒழுகலாறுகளைக் குறட்பாக்களின்வழி இவ்வுலகிற்கு அவர் எடுத்துக்கூறுகிறார். தனிமனித உணர்வுகள் சமூக வளர்ச்சிக்கு துணை புரியும் பாங்கினையும் குறிக்கோளினையும் குறித்து இனங்காண முயலுவதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

**திறவுச்சொற்கள்**

அறிவுக்குழவி, அறக்கடவுள், கண்காணிப்பு, உணர்வுச்சிகரம்

**முன்னுரை.**

மானுட வாழ்வை நெறிப்படுத்தும் ஆற்றல் அற நூல்களுக்கு உண்டு. அதில் முதலாவதாக விளங்குவது திருக்குறளாகும். அதிலும் இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை. மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம். மனிதன் மனிதனுக்கு சொன்னது திருக்குறள். திருக்குறள் வள்ளுவனார் எனும் அறிவுக்குழவியின் உணர்வுகளை நம் உணர்வுகளோடு பிணைக்கும் வாயில். அந்தச் சான்றோனின் நுண்ணிய அறிவை நம் அறிவுக்கு காட்டும் கண்ணாடி எனலாம். அவர் எழுதிய 1330 குறள்களின் வழி அவர் சுட்டும் தனிமனித உணர்வுகள் குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.

**தனிமனித உணர்வுகள்.**

ஒரு மனிதன் சமூகத்தில் எப்படி நடந்து கொள்கிறான். எப்படிப்பட்டவனாக இருக்கிறான் அவன் செயல்பாடுகள் எல்லாம் அவனின் உணர்வுகளின் வெளிப்பாட்டை பொருத்து அமைகிறது. அந்த உணர்வின் வழியே மனித வாழ்வும் அமைகிறது. திருவள்ளுவரும் தன் குறள்களில் எச்சரிக்க உணர்வு, கண்காணிப்பு உணர்வு, அச்ச உணர்வு, அன்பு உணர்வு, நன்றி உணர்வு, அடக்க உணர்வு, பொறுமை உணர்வு என பல உணர்வுகளைப் பதிவிடுகிறார். அந்த உணர்வுகளைச் சரியாக கையாளத் தெரிந்தவன் வாழ்வில் மிகப்பெரிய வெற்றிகளைப் பெற முடியும் என்பதற்குத் திருக்குறள் மிகச் சிறந்த ஒர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது அவ்வுணர்வுகள் ஒவ்வொன்றாகப் பின்வருமாறு காணலாம்.

**எச்சரிக்கை உணர்வு**

எச்சரிக்கை உணர்வு என்பது முன்னறிவு. முன்னறிவு உடையவர்கள் எப்பொழுதும் எச்சரிக்கையாக இருப்பர். பொதுவாக மக்கள் எல்லோருக்கும் நிகழ்கால அறிவே இருக்கும். ஒரு சிலருக்குக் கடந்த கால அறிவு இருக்கும். மிகச் சிலர்க்கே எதிர்கால அறிவு இருக்கும். அந்த எதிர்காலத்தை அறியும் உற்ற அறிவால் அடைய வேண்டிய பயனை அடைய விரும்புவர். அதை நல்ல முறையில் ஈடுபடுத்த வேண்டும். ஒவ்வொரு நிலையிலும் அத்தகையவர்க்கு விழிப்புணர்வு மிகவும் இன்றியமையாதது. இந்த விழிப்புணர்வான எச்சரிக்கை இல்லாமல் போனால் ஒருவர் பல இடர்பாடுகளை எதிர் நோக்க வேண்டி இருக்கும். எச்சரிக்கையாக இருப்பவர்களுக்கு இந்த இடர்பாடுகள் ஏற்படுவது இல்லை அல்லது அவை குறைவாகவே இருக்கும். வருமுன் அறிந்து காத்துக் கொள்ளும் திறன் உடையவர்களுக்குத் துன்பம் என்பது அவ்வளவு சீக்கிரம் ஏற்படாது அத்தகைய எச்சரிக்கை உணர்வுடன் மனிதன் வாழ்ந்தால் அவனுக்குத் துன்பமே வராது என்பதை வள்ளுவர் தன் குறளில் குறிப்பிடுகிறார்(குறள் 429). மேலும் இந்த எச்சரிக்கை உணர்வு

உடையவர்கள் சிறப்பான வாழ்க்கை வாழ்ந்து பயனும் பெருமையும் பெறுகின்றனர். அத்தகு அறிவு இல்லாதவர்கள் சிந்திக்கும் திறனற்று இருக்கின்றனர். இதனை அறிவுடையோர் எதிர்காலத்தை எதிர்காலத்தில் நிகழப்போவதை எண்ணி அறியவல்லார். அறிவில்லாதவர் அதை அறிய முடியாதவராக இருப்பார். **(குறள் 427).** என்பதை தெளிவுபடுத்துகிறார் திருவள்ளுவர்.

**கண்காணிப்பு உணர்வு**

எச்சரிக்கை உணர்விற்கு அடிப்படையில் தோன்றுவது கண்காணிப்பு உணர்வு. எச்சரிக்கை உணர்வும் கண்காணிப்பு உணர்வும் ஒன்றுக்கொன்று பிணைந்தவை. ஒன்றினால் ஒன்று சிறந்து விளங்குவதாகும். எச்சரிக்கை உணர்வுடன் இருக்க வேண்டும் என்றால் கண்காணிப்பு இருக்க வேண்டும். ஒரு பொருள் அல்லது ஒரு செயல் கெட்டுவிடக்கூடாது என்றால் அவற்றின் மேல் கருத்து வைத்து கண்காணிப்புடன் இருத்தல் என்பது மிகவும் அவசியம். ஒரு துன்பம் வராமல் எச்சரிக்கையுடன் இருப்பது ஒரு விஷயம் என்றால் அந்தத் துன்பம் ஏற்படாதவாறு கண்காணிப்புடன் இருக்கவும் வேண்டும். முன்னதாகக் காக்காமல் பின்னதாக வரும் அழிவைத் தடுத்து நிறுத்த முடியாது. இதனை ஒரு துன்பம் வரும் முன்னால் அந்த துன்பத்தை எண்ணி எச்சரிக்கை உணர்வோடு காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை நெருப்பின் முன் வைத்த வைக்கோல் போர் போல் அழிந்துவிடும் என்ற கண்காணிப்பு உணர்வை இதன் மூலம் பதிவு செய்கிறார் திருவள்ளுவர்**(குறள் 435).** கண்காணிப்பு உணர்வு என்பது வரும் இடையூறுகளை முன்னறிந்து காக்காமல் மறந்து சோர்ந்தவன் பின் அவை வந்த போது தன் பிழையை நினைத்து இரங்குவான் **(குறள் 535).** திருவள்ளுவர் எச்சரிக்கை உணர்வு, கண்காணிப்பு உணர்வு, ஆகிய இரண்டு உணர்வுகள் இருந்தாலே ஒருவன் விரைவில் முன்னேறி விடுவது திண்ணம் என்கிறார். அந்த உணர்வு தனி மனிதனுக்கு அவசியம் என்பதைத் தன்னுடைய குறள்களில் வலியுறுத்துகிறார்

**அச்ச உணர்வு**

மனிதர்களின் அச்ச உணர்வைத் திருக்குறள் கண்டிக்கிறது. மனிதர்களுக்குத் தைரியம் தேவை, வீரம் தேவை எனத் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். தீயவற்றைச் செய்வதற்கு மனிதர் அச்சம் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்துகிறார். இவ்விடத்தில் தீச்செயலைச் செய்வதற்கு தீவினையாளர்கள் அச்சம் கொள்ள மாட்டார்கள்; ஆனால் மேலோர்கள் அத்தீய செயலைச் செய்வதற்கு அஞ்சுவார்கள் என்பதை வலியுறுத்துகிறார். தீய செயல்களைத் தீயை விடக் கொடியதாக நினைத்து சான்றோர்கள் அதைச் செய்ய அஞ்சுவார்கள் என்கிறார். மேலும் அஞ்ச வேண்டியவற்றுக்கு அஞ்சாது இருப்பது பேதமை ஆகும். அறிவுடையவர்கள் அஞ்ச

வேண்டியவற்றுக்கு அஞ்சவே செய்வார்கள். அச்ச உணர்வு எந்த இடத்தில் வேண்டும் என்றால் தீயவற்றைச் செய்வதற்கு அச்ச உணர்வு வேண்டும். சான்றோர்கள் அந்த உணர்வுக்கு அஞ்சுவார்கள் அதாவது தீயவற்றைச் செய்வதற்கே அஞ்சுவார்கள் என்பதையும் தன்னுடைய குறளில் வலியுறுத்துகிறார் (குறள் 201,202).

**அன்பு உணர்வு**

பிற உயிர்களிடம் காட்டும் அன்பு உணர்வு ஒரு தனி மனிதனுக்கு அவசியமான ஒன்று. ஒருவர் அன்பானவராக இருந்தால் அவரால் இரக்கத்தை மறைக்க முடியாது. அன்பு உணர்வு உடையவர்கள் தன் உடலையும் பிறருக்கு உரிமையாக்கி வாழ்வார். அன்பில்லாதவர் எல்லா பொருளையும் தமக்குரிய என எண்ணி வாழ்வர் **(குறள் 72).** அன்பு உணர்வு பெருகும் போது கண்ணில் ஈரம் பெருகி வெளிப்படும். அத்தகைய அன்பு உணர்வு அற உணர்வுக்கு மட்டுமல்ல வீரத்திற்கும் துணையாக அமையும் நல்ல நட்புறவை ஏற்படுத்தும் என்று சுட்டுகிறார் வள்ளுவர். **(குறள் 76).**

**இரக்க உணர்வு**

அன்பு என்பது மனைவி மக்கள் உறவுகளிடம் ஏற்படுவது. இரக்கம் என்பது எல்லா உயிர்களிடமும் கருணையுடன் நடந்து கொள்வது. அன்பின் மேம்பட்ட நிலையே அருள் இரக்கம். அன்பு விரிந்து அருளாக மலரும். ஓர் உயிருக்கு துன்பம் ஏற்பட்டால் அத்துன்பத்தைத் தனக்கு ஏற்பட்ட துன்பமாகக் கருதி அந்த உயிரின் மீது ஏற்படுவது இரக்க உணர்வு. இது ஒவ்வொரு மனிதனிடமும் இருக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர். இந்த உணர்வையே வள்ளலாரும், “வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்” என்ற அடிகளில் வெளிப்படுத்துகிறார். மனிதனின் இரக்க உணர்வால் துன்பமில்லாத வாழ்க்கை வாழ முடியும். அருள் நிறைந்த நெஞ்சினை உடையவர் இருளடைந்த தீயவர் உலகத்தில் சென்று சேர்தல் இல்லை என்கிறார் வள்ளுவர் **(குறள்-243).** உயிர்களை எல்லாம் காத்து அருள் செய்கின்றவனுக்குத் தீவினைகள் ஏற்படாது என்கிறார் வள்ளுவர் **(குறள்-244).** மேலும் இவ்வுலகில் பிறரைத் துன்புறுத்தும் வன்முறை நீங்கி அருள் உணர்வு மலர வேண்டும் எனில் அவ் உணர்வு நம்மிடம் மேலோங்கி இருக்க வேண்டும் என்கிறார். எதைப் போன்று எனில் தன்னைவிட வலிமை குறைந்தவனிடம் முறைகேடாக நடக்க முயலும் போது தன்னைக் காட்டிலும் வலிமை மிக்கவர் முன் நாம் அடங்கி ஒடுங்கி நிற்கும் நிலையை எண்ணவேண்டும் அப்படி எண்ணினால் மனிதனுக்கு அருள் உணர்வு மேம்படும் என்பதைப் பதிவிடுகிறார் **(குறள் 250).**

**நன்றி உணர்வு**

நன்றி செய்தல் மனிதப் பண்புகளில் ஒன்று இந்த உணர்வு இருக்கும் மனிதன் இப்பிறவி மட்டுமல்ல ஏழு பிறவியிலும் மறக்க மாட்டார்கள். இதனைத் தன் குறளில் பதிவிடும் வள்ளுவர் ஏழு பிறப்பு என்னும் தனிமனித நம்பிக்கையை இங்கே எடுத்துக்காட்டுகிறார். நம்முடைய துன்பத்தை போக்கி உதவியவனின் நட்பை மறவாது பலவகையான பிறவியிலும் மறவாமல் போற்றுவர் பெரியோர் என்கிறார் **(குறள்- 77).**

**அடக்க உணர்வு**

மனிதரிடம் காணும் பண்புகளில் ஒன்று அடக்க உணர்வு. அடக்க உணர்வோடு ஒருவன் இருந்தால் அவன் தேவர்களின் நிலைக்கு உயர்த்தப்படுவான் அடக்கம் இல்லை எனில் ஒருவன் தீய வாழ்க்கை வாழநேரிடும். அடக்க உணர்வு அவனுக்கு ஆக்கம் தரக்கூடியது மனதின் கண் எழும் சினம் காத்து அடங்கி இருக்கக்கூடிய அவனைக் காண சமயம் பார்த்து அறக்கடவுள் காத்து நிற்கும் என்கின்றார். கடும் சினம் போன்ற உணர்ச்சிகள் எழாமல் மனதுக்குள்ளேயே அடக்கும் வகை அறிந்தவனை அறம் தானே சென்றடையும். சினத்தை அடக்குபவர்களுக்கு மிகப்பெரிய சிறப்பு செய்யும் வகையில் இக்குறள் அமைந்துள்ளது **(குறள்-130).**

**பொறுமை உணர்வு**

பொறுமை மனிதனிடம் மன்னிக்கும் தன்மையை வளர்க்கக் கூடியது. இவ்வுணர்வு மனிதனிடம் சகிப்புத்தன்மையை ஏற்படுத்தும்; மேலும் நட்பு ஏற்படுத்தும். அறியாதவர்கள், புரியாதவர்கள் செய்யும் இன்னலையும் துன்பத்தையும் கண்டு கொதிக்காது விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு உண்டாக்கும். அறிவிலிகள் இழைத்த கொடுமைக்கும் தீங்கிற்கும் பழிவாங்காது புறந்தள்ளி மன்னிக்கும் பெருங்குணத்தை உருவாக்கும். எடுத்த காரியத்தின் குறிக்கோளில் சிதறாது பிறவற்றை ஒதுக்கும் கெட்டிக்காரத்தனம் இவையெல்லாம் பொறுமை உணர்வின் சிகரங்கள் என்கிறார் திருவள்ளுவர். அளவு கடந்து செய்யப்பட்ட தீங்கைப் பொறுத்துக் கொள்வதை காட்டிலும் அந்தத் தீங்கை அறவே மறந்து விடுவது ஒரு சிறந்த பண்பாக வள்ளுவர் குறிப்பிடுகின்றார்**(குறள்.152).** ஒரு மனிதன் நிறை உடையவனாக இருக்கும் தன்மை தன்னை விட்டு நீங்காமல் இருக்க வேண்டும் என்றால் அவன் பொறுமையைப் போற்றி ஒழுக வேண்டும் என்கின்றார் வள்ளுவர்**(குறள் 154).**எல்லை கடந்து, நெறி கடந்து தீய சொற்களால் திட்டுபவரையும் பொறுத்துக் கொள்பவர் இல்லற வாழ்க்கையில் வாழ்ந்தாலும் துறவியைப் போல தூய்மையானவரே என்கிறார் வள்ளுவர். பொறுமை உணர்வோடு வாழும் பொழுது அவன் துறவியைப் போல ஒரு தனி மனிதன் எல்லோராலும் மதிக்கப்படுவான் என்ற கருத்தை இங்கு வலியுறுத்துகிறார்.

**முடிவுரை**

திருக்குறள் காலத்தால் அழியாத ஒர் இலக்கியம். நல்லொழுக்கமும். அர்த்தமுள்ள வாழ்வும் நடத்துவதற்கு மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்குகிறது. ஒரு தனி மனிதனின் முன்னேற்றம் சமுதாயத்தின் முன்னேற்றம். அதுவே நாட்டினுடைய முன்னேற்றமாகவும் பார்க்கப்படுகின்றது. உணர்வின் வழியாக தனி மனிதன் முன்னேறுகின்ற பொழுது அவனது நாடும் முன்னேறும். உணர்வுகளைக் கையாளத் தெரிந்த மனிதன் மிகச்சிறந்தவனாக வரலாற்றில் இடம் பெற முடியும். அத்தகைய உணர்வுகளைக் கையாளுவது குறித்த திருவள்ளுவருடைய கருத்துகள் ஒரு மனிதனை மேன்மேலும் உயர்வுக்குக் கொண்டு செல்லும் என்பது உறுதியான ஒன்று. திருவள்ளுவர் கூறிய உணர்வுகளைச் சிறப்பாகக் கையாண்டு நாமும் வாழ்வில் உயர்வு பெறுவோம்.

**துணை நூல்கள்**


1.வள்ளுவம், வ.சுப.மாணிக்கம். மெய்யப்பன் பதிப்பகம், மறுபதிப்பு, 1993

2.திருக்குறள் நீதி இலக்கியம்., க.த. திருநாவுக்கரசு,. சென்னைப் பல்கலைக்கழகம், 1977

3. குறள் ஓவியம். கலைஞர் கருணாநிதி. பாரதி பதிப்பகம், 2021.